1990 மே 11]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி அய்ய லூரில் அரசு மருத்துவமனை கட்டப்படுமா என்று இருக்கிறது. ஆகவே, இவர்கள் கேட்டிருக்கிறார்கள் என்ற குறிப்போடு இந்த ஆண்டு மட்டும் 10 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு கட்டிடங் கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையமும் துவக்கப்படுவதற்காகத்தான் அந் தப் பணம் கொடுக்கப்படுகிறது. கட்டிடம் கட்டுவதற்காக அந் தத் தொகை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இருந்தாலும் உறுப்பினருடைய கோரிக்கையை கவனித்து இந்த ஆண்டோ அல்லது வருகிற ஆண்டுகளிலோ படிப்படியாக கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்கிற முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இரவுப் பணி படி.

* 7801—திரு. குமரி அனந்தன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் நர்சு களுக்கு மத்திய அரசில் பணிபுரியும் நர்சுகளுக்கு வழங்கப்படுவது போல் இரவுப் பணி படி (Night Duty Allowance) வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

இது குறித்த செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

சித்த மருத்துவர்களுக்கு உதவித் தொகை.

* 8194—திரு. எம். முத்தையன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சித்த மருத்துவர்களுக்கு அரசு மாதா மாதம் கொடுத்துவரும் உதவித் தொகை சங்கராபுரம் தொகுதியிலுள்ள சித்த மருத்துவர்களுக்கு தரப்படவில்லை என்பதை அரசு அறி யுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு எப்பொழுது அளிக்கப்படும்?

[1990 மே 11

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சங்கராபுரம் தொகுதிக்குட்பட்ட பதிவு பெற்ற, 60 வயதுக்கு மேற்பட்ட சித்த வைத்தியர்களிடமிருந்து ஓய்வூதியம் வேண்டி விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடம் இல்லை. எனினும், ஓய்வூதியம் பெற விண்ணப்பங்கள் வரப்பெற்றால், பரிசீலிக்கப்படும்.

9.50 மணி

திரு. எம். முத்தையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விண்ணப்பங்கள் வரவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நானே விண்ணப்பத்தை பதிவு செய்து, அரசுக்கு அனுப்பி இருக்கிறேன். நான் சித்த வைத்தியர் சங்கத்தின் தலைவனாக இருக்கிறேன். என்ன காரணத்தால் அது வரவில்லை என்பது தெரியவில்லை. அந்த விண்ணப்பம் கைக்கு வந்து சேர்ந்த பிறகாவது, அவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதோடு, அவர்களுக்கு லைசென்ஸ் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பரம்பரை சித்த மருத்துவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட வேண்டுமானால் அவர்கள் 'பி' அல்லது 'சி' என்ற நிலையில் பதிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும். வாழ்க்கை நடத்த முடியாத நிலையில் இருக்க வேண்டும். ஆண்டு வருமானம் 6,000-க்கு உட்பட்டு இருக்க வேண்டும். இந்த மூன்று தகுதிகள் இருக்குமானால் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. கள்ளக்குறிச்சியைச் சேர்ந்த பரம்பரை சித்த மருத்துவர்களான திரு. சுப்பராயலு நாயுடு, திரு. சுந்தரராஜன் ஆகிய இருவரும் விண்ணப்பித்திருந்தார்கள். இவர்கள் 'பி' அல்லது 'சி' நிலை பெறாத காரணத்தால் இவர்கள் மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. வேறு எந்த விண்ணப்பங்களும் வரவில்லை என்று ஆட்சித் தலைவரிடமிருந்து குறிப்புகள் வந்திருக்கின்றன. இந்தத் தகுதிக்கு உட்பட்டு யாராவது விண்ணப்பித்திருந்தால், அதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரவர்கள் கொடுத்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். முத்தையன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த சித்த வைத்தியம் மூலமாக சர்க்கரை வியாதி, ரத்தக் கொதிப்பு போன்ற வியாதிகள் எல்லாம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வியாதிகள் எல்லாம் எப்படிக் குணமாகும் என்று கேட்கிறீர்களா? அமைச்சரவர்களிடம் என்ன கேட்கப் போகிறீர்கள்?

1990 மே 11]

திரு. எம். முத்தையன்: குணப்படுத்தும் அருமையான சித்த வைத்தியர்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் சித்த வைத்திய மருத்துவக் கல்லூரிகளில் ஆசிரியர்களாகப் போட்டு, மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் சித்த வைத்தியக் கல்லூரிகள் 2 நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கே இருக்கிற ஆசிரியர்கள் சித்த வைத்தியத்திலே பயிற்சி பெற்று, பட்டம் பெற்றவர்கள்தான். பட்டம் பெற்று, அதற்குரிய தகுதியைப் பெற்றவர்களைத்தான் அதற்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காண்ட்ராக்ட் முறையை ரத்து செய்தல்.

*2339—திரு. கே. ரமணி:
மாண்புமிகு செய்தி மற்றும்தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு மின் வாரியம், நெய்வேலி அனல் மின் திட்டம் ஆகிய நிறுவனங்களில் காண்ட்ராக்ட் முறையை ரத்து செய்வது பற்றி தொழிலாளர் நல இலாக்கா சார்பில் ஒரு குழு ஆய்வு செய்தது பற்றி அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தெரியும்.

(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியம், அதன் அனல் மின் நிலையங்கள் மற்றும் நெய்வேலி அனல் மின் நிலையம் ஆகியவற்றில் நிலவும் ஒப்பந்தத் தொழிலாளர் முறை பற்றி ஆராய்வதற்காக 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் குழு ஒன்றை அரசு அமைத்தது. அக்குழு 1987 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் அதன் பல்வேறு அனல் மின் நிலையங்கள் பற்றி குழுவால் அளிக்கப்பட்ட அறிக்கையினை ஒப்பந்தத் தொழிலாளர் மாநில ஆலோசனைக் குழு ஆராய்ந்து தனது பரிந்துரையினை அரசுக்கு அளித்தது. அப்பரிந்துரையின் அடிப்படையில் சுமார் 20 பணிகளில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையை நீக்குவதற்கான செயற் குறிப்பினை அரசு பரிசீலித்து வருகிறது.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS